பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 08 2025 6 45
***திங்கட்கிழமை*** காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் கட்டுப்படுத்துவது என்ற மத்திய அரசின் தொலைநோக்கை எட்டுவதில் Kandla துறைமுகம் முன்னோடியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

2. மக்களுக்கு நீதி வழங்குவதற்காகவே பிரதமர் திரு. நரேந்திர மோடி புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டுவந்துள்ளதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

3. சென்னை மெரினா கடற்கரையில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய வசதிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

4. தமிழகத்தில் போதைப்பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. கஜகஸ்தானில் நடைபெற்று வரும் தடகளப் போட்டியின் ஆடவர் Triple Jump பிரிவில் இந்தியாவின் அப்துல்லா அபுபக்கர் பட்டம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் கட்டுப்படுத்துவது என்ற மத்திய அரசின் தொலைநோக்கை எட்டுவதில் Kandla துறைமுகம் முன்னோடியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள இந்தத் துறைமுகத்தில் முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தால் அமைக்கப்பட்ட முதலாவது பசுமை ஹைட்ரஜன் ஆலை செயல்பாட்டுக்கு வந்திருப்பதை தமது சமூக வலைதளத்தில் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

தீன்தயாள் துறைமுகத்தின் இந்த நடவடிக்கை ஒரு நீடித்த முன்முயற்சி என்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

மக்களுக்கு நீதி வழங்குவதற்காகவே பிரதமர் திரு. நரேந்திர மோடி புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டுவந்துள்ளதாக

மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இதன்மூலம் இந்தியர்களை தண்டிப்பதற்காக ஆங்கிலேயர் கொண்டு வந்த இந்திய குற்றவியல் சட்டங்களின் பயன்பாடு கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தில்லி யுனியன்பிரதேசத்தில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களும் முழுமையான பயன்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர Neva எனப்படும் தேசிய மின்னணு சட்டப்பேரவை நடைமுறைகள், நாட்டில் உள்ள அனைத்து சட்டப்பேரவைகளிலும் காகிதப் பயன்பாட்டை குறைக்கும் என்றும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<>>>>**

சென்னை மெரினா கடற்கரையில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியல் மேம்பாட்டிற்கான புதிய வசதிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்தக் கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் பெறும் நோக்கில் மூங்கிலால் ஆன நிழற்குடைகள், சாய்வு நாற்காலிகள், அமரும் நாற்காலிகள், கண்காணிப்பு கோபுரங்கள், முகப்பு வளைவு, தியான மையம். வாசிக்கும் அறை மற்றும் தன்படம் எடுக்கும் இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர ஏராளமான தென்னை மரங்களும் நடப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான சக்கர நாற்காலிகள், குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி சாதனங்கள் மற்றும் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

ஏ.டி.எம். மையங்களில் 500 ரூபாய் நோட்டுகள் பட்டுவாடாவை நிறுத்தும்படி வங்கிகளுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

வரும் செப்டம்பர் 30ஆம் தேதியுடன் 500 ரூபாய் நோட்டுகளை ஏ.டி.எம். எந்திரங்களில் நிரப்புவதை நிறுத்தும்படி வெளியாகியுள்ள வாட்ஸ்அப் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று ரிசர்வ் வங்கி விளக்கம் அளித்துள்ளது.

மேலும் வருங்காலத்தில் 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுகளை மட்டுமே ஏ.டி.எம். மையங்களில் எடுக்க முடியும் என்ற தகவலையும் ரிசர்வ் வங்கி மறுத்துள்ளது.

**<<<<>>>>**

தமிழகத்தில் போதைப்பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நெல்லையில் நேற்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோருடன் ஆலேசனை நடத்தியபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்றார்.

தமிழகத்தை ஆளும் திமுக அரசு மக்கள் விரோத அரசாக செயல்படுவதாகவும், மாநிலத்தில் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் கொலைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

**<<<<>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடியால் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையம், மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையம் அதிக பரப்பளவு கொண்டதாகவும், அதிநவீன வசதிகள் செய்யப்பட்டிருப்பதாலும் விரைவில் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிழுருப்பதாக விமான நிலைய இயக்குநர் திரு. காட்வின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சந்தித்துப் பேசியுள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, நடப்பு அரசியல் விவகாரங்கள் குறித்து விவாதித்ததாக தெரிகிறது.

குடியரசுத்தலைவரை நேற்று காலை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசிய நிலையில், உள்துறை அமைச்சரும் சந்தித்துப் பேசியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

<<<<>>>>

நாட்டில் வேளாண் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்குவது, சாகுபடி பணிகளுக்கு உதவியாக உள்ளது என்று திருப்பூர் மாவட்டம் காங்கேயம் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior இந்தியாவில் 5 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

------------

அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினய் மோகன் குவாத்ரா, அமெரிக்க புலனாய்வு அமைப்பின் இயக்குநர் திருமதி Tulsi Gabbard-ஐ சந்தித்து பரஸ்பர நலன் சார்ந்த அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

------------

நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவாக 7 புள்ளி ஏழு இரண்டு பில்லியன் டாலர் என்ற அளவை எட்டியுள்ளது.

------------

ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவின் 3 நாள் கூட்டம் அந்த வங்கியின் ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் மும்பையில் இன்று தொடங்குகிறது.

------------

எண்ணெய் சேமிப்பு வாரம் இன்று தொடங்குகிறது.

------------

மகாராஷ்டிர மாநிலம் Morshi பகுதியில் அமைக்கப்படவுள்ள மீன்வள அறிவியல் கல்லூரிக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் அடிக்கல் நாட்டினார்.

------------

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள VinFast மின்சார கார் தொழிற்சாலையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைக்க உள்ளதையொட்டி தூத்துக்குடி நகரில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட உள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

------------

தூத்துக்குடி பனிமயமாத பேராலய ஆண்டத் திருவிழாவின் ஒருபகுதியாக திவ்ய நற்கருணை பவனி நடைபெற்றது.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் தடகளப் போட்டியின் ஆடவர் Triple Jump பிரிவில் இந்தியாவின் அப்துல்லா அபுபக்கர் பட்டம் வென்றார்.

அவர் 16 புள்ளி புஜ்ஜியம் எட்டு மீட்டர் தொலைவைத் தாண்டி முதலிடம் பெற்றார்.

--------------

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் பஞ்சாப் நம்தாரி அணி – இந்திய விமானப் படை அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்று ஏ பிரிவில் முன்னிலை பெற்றுள்ளது.

---------------

சப் ஜுனியர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் பெங்களுருவில் இன்று தொடங்குகிறது.

வாட்டர் போலோ மற்றும் டைவிங் போட்டிகளும் இன்று தொடங்குகிறது.

இதில் சுமார் 600க்கும் அதிகமான வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

----------------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் நடைபெற்ற வல்வில் ஓரி கோப்பைக்கான வில்வித்தைப் போட்டியில் கோவையைச் சேர்ந்த நக்சத் அதர்வா சாம்பியன் கோப்பையை வென்றார்.

இப்போட்டியின் இந்தியன் வில் பிரிவில் கர்நாடக வீரர் ராஜராஜேஸ்வராவும், Recurve பிரிவில் புதுச்சேரியை சேர்ந்த சாய் கவின் குமரனும், காம்பவுண்ட் பிரிவில் கோவையைச் சேர்ந்த சரணவ்-வும் வெற்றி பெற்றனர்.

**<<<<>>>>**